**செய்தி வெளியீடு எண்: 647** **நாள்:27.09.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் **26.9.2019** அன்று தலைமைச் செயலகத்தில், மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் சார்பில் **6.9.2019** அன்று புது தில்லியில் நடைபெற்ற விழாவில், ‘‘பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்’’ திட்டத்தின் கீழ் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக பிறப்பு பாலின விகிதம் அதிகரிக்கும் வகையில் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருவதற்காக நாமக்கல் மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட சிறந்த மாவட்டத்திற்கான விருதினை நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம். ஆசியா மரியம், இ.ஆ.ப., அவர்களும், இத்திட்டம் குறித்து மக்களிடையே சிறப்பான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தியமைக்காக திருவள்ளூர் மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட சிறந்த மாவட்டத்திற்கான விருதினை திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மகேஸ்வரி ரவிகுமார், இ.ஆ.ப., அவர்களும் காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, இ.ஆ.ப., சமூகநல ஆணையர் திரு. த. ஆபிரகாம், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**